| TNVR13001013 2023 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி,<br>2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் நாள் வியாழக்கிழமை<br>I.A.No.2/2024 in O.S.No.289/2023 |
|---|---|

1. மகாலிங்கம்
2. பெருமாள்
3. கருப்பசாமி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

–எதிரிடை–

கணேசன் ... எதிர்மனுதாரர் / வாதி

இந்த மனுவானது 16.12.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.வி.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ராஜாதேசிங் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

<u>உத்தரவு</u>

10.04.2024 ம் தேதி மனுதாரர்கள்மீது எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி CPC Order 9 Rule 7 and Section 151 CPC–ன் படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:</u>

அசல் வழக்கில் பிராது பரிகாரம் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரர்கள் கட்சி செய்து வருகின்றனர். மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 10.04.2024 ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை தாக்கல் செய்வதற்கு 'ஏ' ரிஜிஸ்டர் மற்றும் 10(1) சிட்டா தேவைப்படுகிறது. அந்த

நகல்கள் தேர்தல் நேரமாக இருந்ததாலும், வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்க காலதாமதம் ஆகிவிட்டதாலும் குறிப்பிட்ட காலத்தில் மனுதாரர்களால் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே அன்றையதினம் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானது. எனவே மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

3.<u>எதிர்மனுதாரர் /வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்.</u>

மனு சட்டப்படி செல்லாது. மனுதாரரின் மனு புரட்டானது. மனுவில் கோரியிருக்கும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதில்லை. மனுதாரர்களுக்கு எதிராக 10.04.2024 ம் தேதி ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்வதற்கு மனுவில் கூறியுள்ள விசயங்கள் பொய்யானவை என்று ஆட்சேபிக்கப்படுகின்றன. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை வழக்கு 06.04.2024 ம் தேதி இடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி எதிர்கோரிக்கை வழக்கில் ஆவண பட்டியலில் 1 வது ஆவணமாக 'அ' பதிவேடு ஆவணமும், 2 வது லக்கமாக 26.08.2023 ம் தேதியிட்ட 10(1) கணக்கு நகலும் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுவில் கூறியிருக்கும் காரணம் பொய்யானது என்பது தெளிவாக தெரிகின்றது. பொய்யான காரணம் கூறி மனுத்தாக்கல் செய்திருப்பதில் எக்ஸ்பார்ட்டி உத்தரவை மாற்ற கோரிக்கை வைக்க மனுதாரர்களுக்கு உரிமை இல்லை. மனுதாரர்கள் நல்லெண்ணத்துடன் இம்மனுவைத் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதார்களின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து சொத்துரிமை விளம்புகைப் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர் / வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்நிலையில், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை தாக்கல் செய்வதற்கு 'ஏ' ரிஜிஸ்டர் மற்றும் 10(1) சிட்டா தேவைப்படுவதாகவும், அந்த நகல்கள் தேர்தல் நேரமாக இருந்ததாலும், வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்க காலதாமதம் ஆகிவிட்டதாலும் குறிப்பிட்ட காலத்தில் மனுதாரர்களால் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை தாக்கல் செய்ய முடியவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை வழக்கு 06.04.2024ம் தேதி இடப்பட்டுள்ளது எனவும், மேலும் மேற்படி எதிர்கோரிக்கை வழக்கில் ஆவண பட்டியலில் 1வது ஆவணமாக 'அ' பதிவேடு ஆவணமும், 2வது லக்கமாக 26.08.2023ம் தேதியிட்ட 10(1) கணக்கு நகலும் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எனவே மனுவில் கூறியிருக்கும் காரணம் பொய்யானது எனவும் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் மனுவினை ஆட்சேபித்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும், எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையை பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனுதாரரின் மனுவினை மறுத்தளிக்க வேண்டும் என்று பெயரளவில் மறுப்புரை தாக்கல் செய்துள்ளதாகவே காணப்படுகிறது. மேலும், விசாரணையின்போது, எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் இம்மனுவை நிபந்தனையின்பேரில் அனுமதிக்கலாமென மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில், அசல் வழக்கானது சொத்துரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இருதரப்பிற்கும் வாய்ப்பளித்து தீர்வு காண்பது அவசியமென்பதாலும், எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவை நிபந்தனையின்பேரில் அனுமதிக்கலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில்

10.04.2024 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததற்கு இம்மனுவில் கூறியுள்ள காரணங்களை ஏற்றுக்கொண்டு, நீதியின் நலன் கருதி இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், ஷை காலதாமதத்தால் எதிர்மனுதாரர் / வாதிக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டத்திற்கு ஈடாக மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எதிர்மனுதாரர் / வாதிக்கு செலவுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார் எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே, இந்த மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் செலவுத் தொகையாக ரூ.1,000/–த்தை எதிர்மனுதாரர்/ வாதிக்கு 09.01.2025 தேதிக்குள் கொடுக்க வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில், இந்த மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 09.01.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர், என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்கள்தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை.
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை.

J SELVAN JESU RAJA Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.2/2024 in O.S.No.289/2023
உத்தரவு நாள் –02.01.2025